காட்டப்பட்டு வருகின்றன. தணிக்கை செய்யப்பட்டு வெட்டப் பட்ட காட்சிகளைத் திரையரங்குகளில் காட்டுவதில்லை. அப் படிக் காட்டப்படுமேயானால் அப்படிப்பட்ட திரையரங்குகளின் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டிருக்கின்றன; அல் லது முழுமையாகவும் ரத்துச் செய்யப்பட்டு வருகிறது என் பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி ; மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தவிதமான நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறினாலும் கூட, இன்றைக்கு கண்கூடாக * .... பார்த்ததாகக் கூறுகிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள தியேட்டர்களில் கூட இந்த ஆபாசக் காட்சிகள், வன்முறைக் காட்சிகள் உள்ள சினிமாப் படங்கள் காட்டப்படுவதாகத் தெரிய வருகிறது. இவைகளை அரசு கண் காணித்துத் தடை செய்ய வேண்டுமென்று பல முயற்சிகளைச் செய்தாலும் கூட, அது பலனளிக்காமல் இருக்கின்ற காரணத்தால் அதை மத்திய அரசு தணிக்கைக் குழு வெட்டுகிறதோ, என்னமோ, அதைப்பற்றி நமக்குப் பிரச்சினை இல்லை. இன்றைக்கு நாம் கண்காணித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையில் இப்படிப்பட்ட படங்கள் வெளியிடப்படும்பொழுது அதை காவல் துறை மூல மாகவோ அல்லது அந்தவிடக் கடுமையான நடவடிக்கை எடுக்கக் கூடிய துறைகள் மூலமாகவோ அதைக் கண்காணித்து, கண்டு பிடித்து, நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், இந்த நிலைமை நீடிக்குமேயானால் ஒரு பெரிய சமுதாயச் சீர்குலைவு ஏற்படும் அந்த அபாயத்திலிருந்து விடுவிக்கின்ற பொறுப்பு தமிழக அரசுக்கு இருக்கிறது. ஆகவே, அரசு இதில் தீவிர கண்காணிப்பைச் செலுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மிகக் கண்காணிப்புடன் கண் காணித்து வருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர், * கண் கூடாகப் .... பார்த்ததாகக் கூறுகிறார்கள் என்று சொன்னார். எங்கு பார்த்தார்; எந்தத் திரையரங்கைப் பார்த் தார்; எந்தக் காட்சியைப் பார்த்தார்; அதைச் சுட்டிக்காட்டினால் நிச்சயம் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்கூடாக என்றால் இப்படிப்பட்ட விவரங்களைக் * கண்கூடாகப்........ பார்த்த தாகக் கூறுகிறார்கள் என்று சொல்லுகிறார்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

1994 மார்ச் 18]

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : பேரவைத் தலைவ அவர்களே, கேள்விப்படுகிறோம் என்று சொல்லியிருக்க வேண் டுமே தவிர, பார்க்கிறோம் என்று சொன்னால், கண்களால் பார்ப்பது..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்கூடாகப் பார்த்த தாகக் கூறுகிறார்கள் என்று அதைத் திருத்திக்கொள்ளலாம் திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இப்போது, காலைக் காட்சி, மாலைக் காட்சி என்று காட்டப்படுகிறது. அதில் ஆபாசக் காட்சியாக இருந்தாலும் சரி, ஒழுங்கான காட்சியாக இருந்தாலும் சரி, நாட்டினுடைய உற்பத்தியைக் கருதி, நாட்டின் முன்னேற்றத்தைக் கருதி, மாலை மணி 5-க்கு மேல் 3 காட்சிகளோ, அல்லது 4 காட்சிகளோ கூட அனுமதித்துவிட்டு, இந்தக் காலைக் காட்சி, பகல் காட்சி இவை களை எல்லாம் ரத்து செய்யக்கூடிய வகையில் ஏதாவது நட வடிக்கை எடுக்க முடிவு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்சி நேரங்களை மாற்றுவதால் ஆபா சத்தை ஒழித்துவிட முடியாது. தலைவலி வந்தால், தலை யணையை மாற்றுவதால் தலைவலி போகாது. ஆகவே, ஆபாசம் எங்கிருந்தாலும் அந்த ஆபாசமான காட்சிகளை காட்டுகின்ற திரையரங்குகள் மீது இந்த அரசு பாசம் காட்டாது. வன்முறை காட்சிகளை காட்டுகின்ற எந்தத் திரையரங்கு களாக இருந்தாலும், அந்தத் திரையரங்குகள்மீது இந்த அரசு மென்மையாக நடந்து கொள்ளாது. வன்மையாக நடவடிக்கை எடுக்கும். அதற்கான சட்டங்கள் இருக்கிறன்றன என்பதனைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 36, திருமதி கவிநிலவு தர்மராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 37, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்,

[1994 மார்ச் 18

37—

தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்குதல்.

* 20525—டாக்டர் எம். கருப்புசாமி :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மில் தொழிலாளிகளுக்கு மாதச் சம்பளம் வழங்கப் படுவது போல், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் மாதச் சம்பளம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தொழில் தகராறு சட்டப் பிரிவு 18(1)-ன் கீழ் 27-4-1993 அன்று தோட்டத் தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பல்வேறு சங்கங்களுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தினக்கூலி மட்டுமே வழங்கப்படுகிறது. தினக்கூலி அடிப்படையில் சம்பளம் கணக்கிடப்பட்டாலும் அவர்களுக்கு சம்பளம் மாதாமாதம் தான் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-10

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் வாழ்விற்காக பல்வேறு நலத் திட்டங்களை சிறந்த முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இந்தத் தேயிலைத் தோட்டங்களில், தேயிலை நாற்றங்கால்களில் தேயிலையைப் பறிப்பதற்கு பெரும்பாலும் பெண்களே ஈடு படுத்தப்படுகின்றனர். வாழையடி வாழையாக, பரம்பரை பரம்பரையாக வேறு எந்தத் தொழிலும் தெரியாத அவர்களுக்கு தினக்கூலி வழங்கப்பட்டு வருகிறது. அதை மாற்றி மாத அடிப் படையில் 'பேசிக் பே' என்று ஃபிக்ஸ் பண்ணி கொடுத்தால் அவர்கள் வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். அதற்கு அரசு சார்பில் ஒரு கமிட்டி அமைக்கப்படுமா? இப்பொழுது தொழிலாளர்களுடைய சம்பளம் எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப் படுகிறது என்று அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்கு கூட்டுப் பேர முறையில் ஒப்பந்தம் ஏற்பட்டு அந்த ஒப்பந்தத்தின் அடிப்